**<u>சுருக்கம்</u>**

திட்டங்கள் – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2009–2010–ல் செயல்படுத்த அரசு மான்யம் ரூ.12.50 கோடி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை (நிலை) எண். 162** **நாள் 11.09.2009**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 06.07.2007.
2. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.2627/ 2009 / உ3 நாள் 31.07.2009

**ஆணை:**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான நான்காண்டு காலத்தில் 561 பேரூராட்சிகளில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தவும், இத்திட்டத்திற்கு பிறவகை நிதி ஆதாரங்களுடன் ஒவ்வோராண்டும் ரூ.25.00 கோடி அரசு மான்யமாக வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி அரசாணையின் அடிப்படையில் 2009–2010ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (B.E) ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இரண்டாவதாக காணும் கடிதத்தில், 2009–2010ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 140 பேரூராட்சிகளின் பணிகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி பெற அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பேரூராட்சிகளில் மாவட்ட ஆட்சியர்களால் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி 2009–2010ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்த அரசு மான்யத் தொகை ரூ.25.00 கோடியை விடுவித்து ஆணை வெளியிடுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பேரூராட்சிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்த நடப்பு (2009–2010) நிதியாண்டிற்கான அரசு மானிய ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.25.00 கோடியில் 50% அதாவது ரூ.12.50 கோடி (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்) முதல் இரு காலாண்டு தவணைகளாக விடுவித்து ஆணையிடுகிறது.

4. மேற்காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

**1. ரூபாய் 2,50,00,000/—(ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்)**

"4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – JC சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –16, பெரும் பணிகள்" ( த.தொ.கு.எண்.4515 00 789 JC 1604)

**2. ரூபாய் 10,00,00,000/—/—(ரூபாய் பத்து கோடி மட்டும்)**

"4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 800 ஏனைய செலவு – JR அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –16, பெரும் பணிகள் " (த.தொ.கு.எண். 4515 00 800 JR 1608)

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு அறிக்கை ஒன்றினை பேரூராட்சிகளின் இயக்குநர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 48872/ந.நி.(ம) கு.வ / 2009 நாள் 10.09.2009—ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை—108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
ஆணையாளர், கரூவூல கணக்கு, சென்னை 35
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை—1.
நகல்
செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை—9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை—108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை—9
நிதி (ந.நி (ம) கு.வ/ நிகு IV /வழிவகை 1) துறை, சென்னை—9.
உதிரி/நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.